தினமணி

**பலத்த காற்று, மழையால் வாழை சேதம்: பாதிக்கப்பட்ட 103 விவசாயிகளுக்கு நிவாரணம்**

First Published : 29 May 2010 11:18:09 AM IST

மதுரை, மே 28: மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, உசிலம்பட்டி, திருமங்கலம், கொட்டாம்பட்டி பகுதிகளில் பலத்த காற்று மற்றும் மழையினால் வாழை, முருங்கை மரங்கள் சாய்ந்ததால் பாதிக்கப்பட்ட 103 விவசாயிகளுக்கு நிவாரண நிதி கேட்டு அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்தார்.

விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சியர் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கடந்த ஏப்ரலில் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் வாழை, முருங்கை மரங்கள் பல இடங்களில் சாய்ந்து சேதம் ஏற்படுத்தியதாகவும் இதற்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரியும் விவசாயிகள் மனுச் செய்திருந்தனர்.

இன்றைய கூட்டத்தில் விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்த ஆட்சியர், வாழை, முருங்கை மரங்கள் சாய்ந்ததால் 30.82 ஹெக்டேர் பரப்பு பாதிக்கப்பட்டதாகவும், இதனால் 103 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கக் கோரி அரசுக்கு பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குப்பம்மாள் சமுத்திரம் கண்மாயில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் குறைபாடுகள் இருப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்திருந்தனர். அதற்கு செயற்பொறியாளர் பதில் அளிக்கையில், கண்மாய் கரை ஓரம் உள்ள புளிய மரங்களில் சிகப்பு மை அடையாளம் உள்ள அளவுக்கு கரை உயர்த்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

திருகுமடை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரியுள்ளனர். மாற்று நிதியிலிருந்து இப்பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் சீமைக்கருவேல் மரங்கள் இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் அனைத்துக் கண்மாய்களிலும் உள்ள சீமைக் கருவேல் மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரி விவசாயிகள் மனு கொடுத்திருந்தனர்.

இது தொடர்பாக ஆய்வு நடத்தி எந்தெந்த இடங்களில் சீமைக்கருவேல் மரங்கள் அகற்றப்பட வேண்டும் என்று பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் விவரங்கள் சேகரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இப்பருவத்துக்குத் தேவையான நெல் விதைகள் 545 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்க தயார்நிலையில் உள்ளது.

பயறு வகை விதைகள் 7.63 மெட்ரிக் டன்களும், பருத்தி விதைகள் 3.3 மெட்ரிக் டன்களும் எண்ணெய் வித்துப் பயிர்கள் 11.5 மெட்ரிக் டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

வேளாண் துறை மூலம் வழங்கப்படும் நெல் விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.5 வீதமும், பயறு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.12 வீதமும் பருத்தி விதைகளுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.20 வீதமும் அரசு மானியம் வழங்குகிறது. விவசாயிகள் விதைகளை தனியாரிடமிருந்து வாங்கும்போது எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலமாக சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க அரசு 65 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் வேளாண் பொறியியல் துறை மூலமாக சொட்டுநீர்ப்பாசனக் கருவிகள் 160 ஹெக்டேர் பரப்பில் அமைப்பதற்கு ரூ.19.8 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து குறைந்த நீரில் அதிக பரப்பளவு பயிரிட்டு அதிக லாபம் பெறலாம் என்றார் ஆட்சியர்.

**மகசூல் பாதிப்புக்கு நிவாரணம் பெற பயிர்க் காப்பீடு செய்ய வலியுறுத்தல்**

First Published : 29 May 2010 11:12:55 AM IST

தேனி, மே 28: விவசாயப் பயிர்களில் இயற்கை சீற்றம் மற்றும் நோய்த் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு நிவாரணம் பெற, விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய வேண்டும் என ஆட்சியர் பூ. முத்துவீரன் வலியுறுத்தினார்.

தேனியில் தேசிய வேளாண்மைக் காப்பீடு திட்டம் தொடர்பாக, கூட்டுறவு வங்கிச்செயலாளர்களுக்கு நடைபெற்ற பயிற்சிக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

தேசிய வேளாண்மைக் காப்பீடுத் திட்டத்தில் இயற்கை சீற்றம், நோய்த் தாக்குதல்காரணமாக ஒரு வட்டாரத்தில் கணிக்கப்பட்ட மகசூல், உத்தரவாத மகசூலைக் காட்டிலும் குறைவாக இருந்தால், அப்பயிரைச் சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு ஏற்பட்டதாகக் கருதி நிவாரணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் விவசாயிகள் மட்டுமின்றி குத்தகைதாரர்களும் பயனடையலாம்.

நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, துவரை, நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, வாழை ஆகிய பயிர்களைக் காப்பீடு செய்யலாம்.

பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள் கடன் வாங்கிய வங்கிகளிலும், மற்றவர்கள் தாங்கள் விரும்பும் வங்கியிலும் பயிர்க் காப்பீடு செய்யலாம்.

இந்த ஆண்டு மாவட்டத்தில் தேசிய வேளாண்மைக் காப்பீடுத் திட்டத்தில் பயிர்க்காப்பீடு பிரிமியம் தொகையாக ரூ. 45 லட்சம் வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் குருமூர்த்தி, மாவட்ட விவசாய நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன், வேளாண்மை காப்பீடுத் திட்டஅலுவலர் சூரியநாராயணன், வேளாண்மை துணை இயக்குநர் பாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 2,500**

First Published : 30 May 2010 02:00:13 PM IST

திருச்சி, மே 29: தமிழகத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ. 2,500 நிர்ணயம் செய்ய வேண்டும் என இந்திய ஜனநாயக கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருச்சி பஞ்சப்பூரில் இக்கட்சியின் தேசிய மாநாடு சனிக்கிழமை நடைபெற்றது. கட்சியின் நிறுவனர் டி.ஆர். பச்சமுத்து கட்சியின் கொடியை ஏற்றி மாநாட்டு நுழைவுவாயிலைத் திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து மாநாட்டு உள்ளரங்கை சென்னை தொழிலதிபர் ஆர். பாண்டுரங்கனும், துறையூர் முத்துக்குமார் நினைவு மாநாட்டுக் கலையரங்கத்தை கட்சியின் பொருளாளர் ஜி. ராஜனும் திறந்து வைத்தனர்.

பின்னர் புகைப்படக் கண்காட்சி அரங்கு திறக்கப்பட்டது. மாநாட்டு மேடையில் லீமாரோஸ் மார்ட்டின் குத்துவிளக்கேற்றினார். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

இந்திய நதிகள் தேசியமயமாக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டும். முதல் கட்டமாக தென்னக நதிகள் இணைக்கப்பட வேண்டும். நாட்டில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசோடு தனியாரையும் மிக அதிகளவில் ஊக்குவித்து தொழில், விவசாயம் பெறுக வழிவகை செய்ய வேண்டும்.

அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தலைசிறந்த தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இணையாக செயல்பட செய்ய வேண்டும்.

இந்தியாவில் 80 சத மக்கள் விவசாயத்தை நம்பி இருப்பதால், பொறியியல் கல்லூரிகளுக்கு சமமாக வேளாண் கல்லூரிகளை நிறுவி, அதில் சேருகின்ற அனைத்து மாணவர்களுக்கும் வேலை உத்தரவாதம் அளித்து, பஞ்சாயத்துதோறும் அவர்களை பணியில் அமர்த்தி, அப்பகுதியின் விவசாயத்திற்கு பொறுப்பேற்க வழிவகை செய்ய வேண்டும்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ. 2,500 நிர்ணயம் செய்ய வேண்டும். விவசாயிகளின் இடுபொருள்களுக்கு தகுந்த விலை நிர்ணயித்து, எந்தச் சூழ்நிலையிலும் விவசாயம் லாபகரமான தொழில் என்ற நிலையை ஏற்படுத்துதல் வேண்டும்.

அரசு தன் வருவாயை தனியாரால் செய்ய முடியாத சாலை வசதிகள், மின்சாரம், உயர்கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, நீர்நிலை பாதுகாப்பு, நதிநீர் போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு போன்றவற்றுக்கு மட்டுமே செலவிட்டு, நலத்திட்டங்கள் என்ற பெயரில் இலவசமாக வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

வெளிநாட்டு மதுபானங்கள் உற்பத்தி, விற்பனையை நிறுத்தி, உடலுக்கு நலம் தரக்கூடிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பதநீர் மற்றும் கள் இறக்குதலை அனுமதிக்க வேண்டும். இலங்கையில் போர் முடிந்து ஓராண்டு நிறைவு பெற்ற நிலையிலும் முள்கம்பி வேலிகளுக்குள் அகதிகளாய் இருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தவும், அவர்களின் சுய நிர்ணயம், சம உரிமை பெற்று வாழவும் விரைந்து வழிவகை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருத்தணியில் திடீர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

திருத்தணி: திருத்தணியில் நேற்று மாலை திடீரென பலத்த மழை பெய்ததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அக்னி வெயில் முடிந்தும் திருத்தணி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது. நேற்று முன்தினம் 105 டிகிரி வெயிலால் பொதுமக்கள் அவதிப்பட்டனர். இந்நிலையில் நேற்று காலை 9 மணி முதல் அனல் காற்றும், கடுமையான வெயிலும் திருத்தணியில் நிலவியது. அக்னி நட்சத்திரம் முடிந்தும் வெயிலின் தாக்கம் குறையாமல் இருந்ததால் நேற்று காலை 11மணி முதல் மாலை 4 மணி வரை பொதுமக்கள் பஜாருக்கு வராமல் வீட்டிலேயே இருந்தனர். மாலை 4 மணிக்கு வானத்தில் திடீரென மேகம் திரண்டு குளிர்ந்த காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால், தெருக்களில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியது.

சாலைகளில் கழிவுநீருடன் வெள்ளம் ஓடியதால் பொதுமக்கள் நடக்க முடியாமல் கடும் அவதிப்பட்டனர். மழை ஒரு மணி நேரம் நீடித்தது. இந்த திடீர் மழையால், திருத்தணி நகர பொதுமக்கள் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த திடீர் மழையால் மக்கள், புழுக்கத்தில் இருந்து குளிர்ந்த காற்றை சுவாசித்தனர்.

**வேளாண் கண்காட்சி கருத்தரங்கு**

பெரம்பலூர்: பெரம்பலூரில் மாவட்ட வேளாண் மை துறை மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேலா ண் முகமை சார்பில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடந்தது. மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலை மை வகித்தார். பெர ம்பலூர் எம்.எல்.ஏ., ராஜ்குமார் முன்னிலை வகித்தார். வேளா ண்மை தொழில்நுட்ப மேலா ண்மை முகமை திட்ட இயக்குநர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை அமைச்சர் நெப்போலியன் சிறப் பு விருந்தினராக பஙகேற்று கண்காட்சி ம ற்றும் கருத்தரங்கத்தை தொடங்கி வைத்துப் பேசினார். தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களின் செயலாளர் நீல்ராஜ், நகராட்சி தலைவர் ராஜா, யூனியன்தலைவர்கள் பெரியசா மி,முத்துக்கண்ணுஉட் படபலர்பங்கேற்றனர்.

**ஆத்தூர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.2.10 கோடிக்கு மஞ்சள் விற்பனை**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 16,199 ரூபாய் விலைக்கு விற்றது. 2.10 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்துள்ளது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த மார்ச் மாதம் நடந்த முதல் ஏலத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 10,789 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்து வாரங்களில் ஒரு குவிண்டால்

14,669 ரூபாய் என விலை உயர்ந்தது. தொடர்ந்து நடந்த ஏலத்தில் குவிண்டாலுக்கு 1,349 ரூபாய் விலை திடீரென சரிந்து, 13 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை உயராமல் இருந்தது.

ஏப்ரல் 24ம் தேதி ஒரு குவிண்டால் 14,169 ரூபாய்க்கும்,தொடர்ந்து நடந்த ஏலத்தில் குவிண்டால் 15 ஆயிரத்து 959 விற்றது. கடந்த ஏப்ரல் மாதத்தில் அடுத்தடுத்து வாரங்களில் நடந்த ஏலத்தில் குவிண்டால் 16 ஆயிரத்து 330 ரூபாய்க்கும், 16 ஆயிரத்து 261 ரூபாய்க்கும் விற்றது. விலை உயர்வால் விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க துவங்கினர். நேற்று முன்தினம் 29ம் தேதி இரவு நடந்த ஏலத்துக்கு 2400 மஞ்சள் மூட்டைகள் மட்டும் வந்தது.

விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 16 ஆயிரத்து 199 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 15 ஆயிரத்து 539 ரூபாயும், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 809 ரூபாய், குறைந்த பட்சமாக 15 ஆயிரத்து 369 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 799 ரூபாய், குறைந்த பட்சமாக 12 ஆயிரத்து 669 ரூபாய்க்கு ஏலம் போனது. மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 16 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் விற்பனையாவதால் கூடுதல் விலையை எதிர்பார்த்து விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை இருப்பு வைக்க துவங்கியதால், குறைந்தளவு மஞ்சள் மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. 2400 மூட்டைகள் கொண்ட 1440 குவிண்டால் மஞ்சள் இரண்டு கோடியே 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**இயற்கை மருத்துவ சங்கக் கூட்டத்தில் "நவதானிய நலன்' பற்றி சொற்பொழிவு**

கும்பகோணம்: கும்பகோணம் அடுத்த ஆடுதுறையில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆடுதுறை இயற்கை மருத்துவ சங்கத்தின் 323வது கூட்டம் துணைத்தலைவர் தர்மதுரை தலைமையில் நடந்தது.

செயலாளர் ராமலிங்கம் வரவேற்றார். தலைவர் தர்மதுரை எளிய உடற்பயிற்சிகளை விளக்கினார். சமீபத்தில் இயற்கை எய்திய சிவசைலம் நல்வாழ்வு ஆசிரம பொருளாளர் ஆழ்வாரம்மாள்ராமகிருஷ்ணன், ஆடுதுறை இயற்கை மருத்துவ சங்க தலைவர் பஷீர் ஆகியோருக்கு மவுன அஞ்சலி செலுத்தினர். மதுராந்தகம் தண்டரைப்பேட்டை நல்வாழ்வு நிலையத்தின் நிறுவனர் ஸ்ரீராமுலு, "நலம் பயக்கும் நவதானியங்கள்,' என்ற தலைப்பில் பேசியதாவது: நம் முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் ஆராய்ந்து தெளிந்து ஆரோக்கியம், ஆன்மீகம் இணைந்த வாழ்க்கை முறையை உருவாக்கி தந்துள்ளனர். இந்த அண்டத்தில் உள்ள நவக்கிரகங்கள் மனித உடலிலும் அமைந்திருப்பதாக நம் முன்னோர்கள் தம் பட்டறிவால் உணர்ந்தனர். மனித உடலின் கட்டுமானத்துக்கு உகந்த ஒன்பது உணவு தானியங்களை கண்டறிந்து அவற்றை நவக்கிரகங்களுக்கு படைத்து வழிபட்டனர். அவற்றையே நவதானியங்கள் என்கிறோம்.

நம் முன்னோர்களின் வழியில் ஒவ்வொரு கிரகத்துக்கும் ஒரு குறிப்பிட்ட தானியத்தை நைவேத்தியமாக படைத்து வழிபட்டு அவற்றை பிரசாதமாக உண்டு வருவது இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது. தற்கால அறிவியல் மனித உடலின் கட்டுமானத்துக்கு நம் உணவு முறையில் முக்கால் பாகம் கார சத்துள்ள

உணவுகளும், கால் பாகம் அமிலச்சத்துள்ள உணவுகளும் இடம்பெற வேண்டுமென்று கூறுகிறது. புரதம் அதிகமாக உள்ள உணவுகள் கார உணவுகள் என்றும், கார்போ-ஹைட்ரேட் அதிகமாக உள்ள உணவுகள் அமில உணவுகள் என்றும் பொதுவாக கூறப்படுகிறது. நவக்கிரகங்களுள் சூரியனுக்கு கோதுமையும், சந்திரனுக்கு நெல்பொறியும் நைவேத்தியமாக படைக்கின்றனர். இத்தானியங்களில் பெரும்பகுதி கார்போ - ஹைட்ரேட் அதாவது அமிலச்சத்து அடங்கியுள்ளது.

சனிக்கிரகத்துக்கு எள் நைவேத்தியம் ஆகும். நவதானியங்களில் எள்ளில் மட்டுமே பெரும்பகுதி கொழுப்பு உள்ளது. நார்ச்சத்தும் அடங்கி உள்ளது. நம் உணவில் ஒன்பதில் ஒரு பங்கு கொழுப்பு இருந்தால் போதுமானது என்பதே இதன் பொருளாகும். மற்ற ஆறு கிரகங்களுக்கு பருப்பு வகைகளையே நைவேத்தியமாக நம் முன்னோர்கள் படைத்துள்ளனர். அவை அனைத்தும் புரதத்தை மிகுதியாக கொண்டவை. அதாவது, எஞ்சிய துவரை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, மொச்சை, உளுந்து, கொள்ளு ஆகிய ஆறு தானியங்களும் கார உணவுகளாகும். நவதானியங்களுள் பயறு பருப்பு வகைகளை முளைக்க வைத்து பச்சையாக அப்படியே சாப்பிடலாம். இவ்வாறு அவர் பேசினார். செயலாளர் ராமலிங்கம் நன்றி கூறினார்.

**துவரை செயல் விளக்க திடல் அமைக்க ரூ.5 ஆயிரம் மானியம்**

நாமக்கல்: "துவரை பயிர் செயல் விளக்கத்திடல் அமைக்க 5 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது' என, புதுச்சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் சித்ரா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் அடுத்த புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி துவரை விதைப்பு செய்து விவசாயிகள் பயன்பெறலாம். ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு 20 கிலோ விதை போதுமானது. தமிழக அரசு தற்போது தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், துவரை சாகுபடியை அதிகரிக்க செயல் விளக்கத்திடல் அமைப்பதற்கு மானியம் வழங்க உள்ளது. செயல் விளக்கத்திடல் அமைக்க, 480 கிலோ ஐசிபிஎல் 85063 துவரை 24 ஹெக்டேர் பரப்பளவுக்கு புதுச்சத்திரம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்துக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் துவரை செயல் விளக்க திடல அமைக்கும் விவசாயிகளுக்கு மொத்த இடுபொருட்களுக்கான செலவினத்தில் 5 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது. புதுச்சத்திரம் வட்டாரத்தில் துவரை சாகுபடி செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் முன் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மண் மாதிரி சேகரிப்பு முகாம்**

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த எலச்சிபாளையம் யூனியனுக்கு உட்பட்ட அகரம் மற்றும் சின்னமணலி கிராமங்களில் மண் மாதிரி சேகரிப்பு முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி மண் ஆய்வின் முக்கியதுவம் பற்றியும், வேளாண் அலுவலர் ராஜகோபால் உரச்செலவை குறைத்து மகசூலை அதிகரிப்பது குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினர். வேளாண் அலுவலர் குழந்தைவேல் மண் மாதிரி எடுப்பது பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தார். எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர்

லோகநாத பிரகாசம், "மண் ஆய்வுப்படி உரமிட்டு மகசூலை அதிகரிக்க வேண்டும்' என, அறிவுறுத்தினர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் சக்திவேல், சுப்ரமணி ஆகியோர் செய்தனர்.

**நீர்வள நிலவள திட்டத்தை விளக்க நடமாடும் கண்காட்சி வாகனம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நீர்வள நிலவள திட்டத்தை பொது மக்களிடம் விளக்கும் வகையில் நடமாடும் கண்காட்சி வாகன பயணம் நடந்து வருகிறது. உலக வங்கியின் நிதி உதவி பெற்று தமிழகம் முழுவதும் நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் பல்வேறு கட்டங்களாக பணிகள் நடந்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில், இத்திட்டத்தின் மூன்றாவது கட்டமாக கம்பைநல்லூர் உபவடிநிலப்பகுதி மற்றும் கோவிலுர் (கோட்டப்பட்டி கல்லார்) உபவடிநில பகுதிகளில் பொதுப்பணித்துறையின் நீர் வள ஆதார அமைப்பு, வேளாண் வணிகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்புதுறை மற்றும் மீன்வளத்துறை மூலம் பல்வேறு திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது மக்கள் மத்தியில் நீர்வள நிலவள திட்டம் குறித்து விளக்கும் வகையில் கண்காட்சி வாகனம் உலாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நேற்று கலெக்டர் அலுவலகத்தில் கண்காட்சி வாகனத்தை கலெக்டர் அமுதா துவக்கி வைத்தார். நேற்று ஏரவு நரிப்பள்ளி, பள்ளிப்பட்டி, கம்பைநல்லூர் ஆகிய பகுதிகளில் வானம் சென்றது. இன்று (மே 27) இரவு திப்பம்பட்டி, கிருஷ்ணாபுரம், கடத்தூர் பகுதியிலும் 28ம் தேதி அதியமான்கோட்டை, மாதேமங்கலம், லளிகம் ஆகிய பகுதிகளிலும், 29ம் தேதி புலிக்கரø, கொட்டுமாரனஅள்ளி, பேளாரஅள்ளி, பி.செட்டிஅள்ளி ஆகிய பகுதிகளிலும் வாகனம் உலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாகன பவனி துவக்க நிகழ்ச்சியில் நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் மணி, உதவி செயற்பொறியாளர்கள் சுரேஷ், சாம்ராஜ், சுந்தரம் மற்றும் உதவி பொறியளர்கள் கார்த்திக், கிருபா, முருகேசன், நாகராஜ் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் திருச்சி பாசன மேலாண்மை மற்றும் பயிற்சி நிலைய பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உய்யக்கொண்டான் வாய்க்காலில் "பெல்' கழிவுநீர் : விவசாயிகள்**

திருச்சி: திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சவுண்டையா தலைமையில் நடந்தது.

டி.ஆர்.ஓ., தட்சிணாமூர்த்தி, வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) சிவராஜ், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்) ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் கோரிக்கைகளை தெரிவித்தனர். தி.மு.க., விவசாய அணி மாவட்ட செயலாளர் கருப்பண்ணன்: ""60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை கண்டறிந்து, அ வர்களுக்கு முதியோர் உதவித்தெ õகை பெற்றுத்தர வேண்டும். ரே ஷன் கடையில் பணியாளர் பற்றா குறை சரி செய்ய வேண்டும்.

அ.தி.மு.க., விவசாயி அணி மாவட்ட செயலாளர் சிவராஜ்: நாகையாநல்லூர் குளத்தில் ஆக்கிரமிப்பு பகுதிகளில் குட்டை வெட்ட கலெக்டர் நிர்வாக அனுமதி வழங்க வேண்டும். தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராஜாசிதம்பரம்: பத்திரப்பதிவு அலுவலகத்துக்கு எந்த வங்கியிலும் பணம் கட்டும்

நடைமுறை கொண்டுவர வேண்டும். தனியார் பள்ளிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டண முறையை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். மத்திய அரசு, தேசிய உயர்நிலைக் கல்வி கழகம் அமைத்துள்ளது. அதன் மூலம் நான்கு சதவீதம் வட்டியில் கல்விக் கடன் வழங்க வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சிவசூரியன்: ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உளுந்து கொள்ளுமுதல் செய்வதில்லை. திருப்பி அனுப்புகின்றனர். கொடிங்கால் இணைப்பு பாலத்தை புணரமைக்க வேண்டும்.

பாரதிய கிஷான் சங்க மாநில பொதுச்செயலாளர் அய்யாகண்ணு: ஜுன் 12 காவிரியில் தண்ணீர் திறந்து விட வேண்டும். விவசாயிகள் கோரிக்கையை மாவட்ட கலெக்டர் தமிழக முதல்வருக்கு பரிந்துரை செய்ய வேண்டும். காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு தலைவர் நாகராஜன்: திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், பெட்டவாய் தலை, சிறுகமணி, ஜீயபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 17ம் தேதி சூறாவளி காற்று வீசியதால், அறுவடைக்கு தயாராக இருந்த வாழைகள் அடியோடு உடைந்து நாசமாயின. வாழைக்கு 100 வீதம் விவசாயிகளுக்கு நஷ்டயீடு வழங்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் மாசிலாமணி: உய்யகொண்டான் வாய்க்கால் மூலம் 30 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலம் பயனடைகிறது. இப்பகுதி பொதுமக்களுக்கு உய்யகொண்டான் பாசனத்தில் வரும் தண்ணீர் தான் நிலத்தடி மற்றும் குடிநீராக பயன்படுகிறது. இந்நிலையில், "பெல்' நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் உய்யக்கொண்டான் வாய்க்கால் பாதிப்படைந்துள்ளது. ஒரு குழு நியமித்து பாசனப்பகுதியை பார்வையிட்டு, ரசாயன கழிவுநீர் கலக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கனும்," என்றார். இவர், வரும்போது ஒரு பாட்டிலில் உய்யகொண்டான் வாய்க்கால் நீரை கொண்டு வந்து கலெக்டரிடம் காட்டினார். இதை பார்த்த கலெக்டர், தண்ணீரை, "சாம்பிள்' எடுத்து ஆய்வு செய்து, விசாரணை நடத்த மாசுக்கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**பாசன மேலாண் பயிற்சி நிலைய இயக்குனருக்கு பிரிவுபச்சார விழா**

திருச்சி: துவாக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் இயக்குனர் இளங்கோவன் இப்பயிற்சி நிலையத்தில் மூன்று ஆண்டுகள் சிறப்பான பணி செய்து பணியிலிருந்து செல்வதை முன்னிட்டு பயிற்சி நிலைய ஊழியர் நலச்சங்கத்தின் சார்பாக மிக சிறப்பான பிரிவு உபச்சார விழா நடந்தது. விழாவில் பயிற்சி நிலையத்தில் பணியாற்றிய அனைத்து ஊழியர்களும், ஆசிரியர்களும், ஒப்பந்த ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நிலையத்தின் பல்வேறு வளர்ச்சிக்கும், பயிற்சிகளின் மேம்பாட்டிற்கும் பெருமளவில் உதவியதையும், ஊழியர்களின் நீண்டநாள் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தும் பாராட்டியும், வாழ்த்தியும் பலர் பேசினர். விழாவில், பயிற்சி நிலையத்தின் இணை இயக்குனர் பிரேம் சேகர், திருவெறும்பூர் வட்டார அனைத்து அலுவலர் ஆசிரியர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மனோகரன், பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்.

ஊழியர் நலச்சங்கத்தின் சார்பாக பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் இயக்குனர் இளங்கோவன் பணியை பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. ஊழியர் நல சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட

விழாவிற்கு இயக்குனர் மனைவி பங்கேற்று, ""இப்பயிற்சி நிலையம் மேலும் வளர வேண்டும். அதற்கு இந்த ஒற்றுமை தொடர வேண்டும்," எனக்கூறி ஏற்புரை வழங்கினார். விழாவிற்கு ஊழியர் நலச்சங்கத்தின் தலைவர் விஸ்வநாதன் தலைமையேற்று கவிதை வாசித்தார். அதன் செயலாளர் ரெங்கசாமி வரவேற்றார். பொருளாளர் ஆண்டாள் நன்றி கூறினார்.

15 லட்சம் மரக்கன்றுகள் நட ஏற்பாடு

விருதுநகர்: மாவட்டம் முழுவதும் ஜூன் 5ம் தேதி உலக சுற்று சூழல் நாளை முன்னிட்டு 15 லட்சம் மரக்கன்றுகள் நட ஏற்பாடுகள் நடந்து வருகிறது. மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் மாவட்டம் முழுவதும் தோண்டி முடிக்கப் பட்டுள்ளன.

இதற்கான முன்னேற்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு அருப்புக்கோட்டை ஆர்.டி.ஓ., முகமது ஆரிப் சாகிப் வச்சக்காரப்பட்டி, தடங்கம், பூசாரிப்பட்டி, துலுக்கபட்டி, ராஜிவ் நகர், இந்திரா நகர், அஞ்சம்பட்டி, ஆர்.ஆர். நகர், ஆர்.எஸ்.ஆர். நகர், எத்திலன்பட்டி, தம்மநாயக்கன்பட்டி, டி.அம்மாபட்டி, காமராஜர் புரம், சின்ன வாடி, தாதம்பட்டி, வி.ராமலிங்காபுரம், கன்னிசேரிபுதூர், தியாகராஜபுரம், குமாரபுரம், மேலச்சின்னையாபுரம் ஆகிய கிராமங்களுக்கு சென்று ஆய்வு செய்தார். உடன் ஒண்டிப்புலி ஆர்.ஐ., பொன்னுச் சாமி சென்றார்.

**மரம் வளர்ப்பு சான்றிதழ் வழங்கல்**

சிவகாசி: சிவகாசி அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் மரம் வளர்ப்பு சான்றிதழ் திட்டம் நடந்து வருகிறது. கல்லூரி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு அவற்றை ஓராண்டுகள் பராமரிக்கப்பட்டு வருவதை பேராசிரியர்கள் உறுதி செய்தனர். இம்மாணவர்களுக்கு மரம் வளர்ப்புச் சான்றிதழ் வழங்கும் விழா கலெக்டர் சிஜி தாமஸ் தலைமை வகித்து சான்றிதழ்களை வழங்கினார்.

முதல்வர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர்கள் கணேசன், சங்கரசிவராமன், ராமகிருஷ்ணன், இளவரசு, சரவணன், ஜெயப்பிரகாஷ், மஞ்சுளாதேவி மற்றும் மாணவ தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

**கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி நிறைவு**

கோத்தகிரி: கோத்தகிரியில் நடந்த காய்கறி கண்காட்சி நேற்று நிறைவடைந்தது. ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் காய்கறி அலங்காரத்தை கண்டு ரசித்தனர்.
கோத்தகிரியில் மூன்று ஆண்டுகளாக காய்கறி கண்காட்சியை தோட்டக்கலைத்துறை நடத்தி வருகிறது. இந்தாண்டு நடந்த முதல்நாள் கண்காட்சியில் 7,566 பேரும், இறுதி நாளான நேற்று மாலை 4.00

மணியளவில் எடுத்த கணக்கெடுப்பின்படி 11 ஆயிரத்து 40 பேரும் கண்டுக்களித்துள்ளனர். மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவில், சிறந்த காய்கறிக்கான பரிசு ஏழு பேருக்கு வழங்கப்பட்டது. மேல்கோடப்பமந்து கிருஷ்ணப்பா, ஊட்டி மார்கெட் ரமேஷ், ஊட்டி மோத்தீஷ், மிளிதேன் அருணா, காவிலோரை பீமன், மிளிதேன் லதா, வெஸ்ட்புரூக் சகாதேவன் ஆகியோர் "ரோலிங் கப் வின்னர்'களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசு வழங்கப்பட்டது.இதேபோல், சிறந்த வீட்டுக்காய்கறி தோட்டம், சிறந்த அரங்குகளுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

**கொப்பரை கொள்முதல் மையத்தில் வியாபாரிகள் ஆதிக்கம் : விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் புகார்**

உடுமலை: உடுமலையில் உள்ள கொப்பரை கொள்முதல் மையத்தில், "விவசாயிகளை விட வியாபாரிகள் ஆதிக்கமே அதிகம் உள்ளதாகவும், விவசாயிகளின் கொப்பரையை அதிகாரிகள் கொள்முதல் செய்வதில்லை' என விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம், உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடந்தது. ஆர்.டி.ஓ., சோமசேகரன் தலைமை வகித்தார். தாசில்தார்கள் கணபதி, லியாகத் அலி முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் பங்கேற்ற விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும்விவசாயிகள் பேசியதாவது:மத்திய அரசு, ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளதால் அறுவடை செய்த மக்காச்சோளத்திற்கு விலை கிடைக்காமல் நஷ்டம் ஏற்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து நேரடியாக மக்காச்சோளத்தை 1,500 ரூபாய்க்கு அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.கொப்பரை கொள்முதலில் பல்வேறு குளறுபடிகள் நடக்கின்றன. விவசாயிகளின் அடையாள அட்டைகளை பெற்று, வியாபாரிகள் கொப்பரையை அரசு கொள்முதல் மையத்தில் விற்று லாபம் பார்க்கின்றனர். இந்த முறைகேட்டிற்கு அதிகாரிகளே உடந்தையாக உள்ளனர்.

கொள்முதல் செய்யப்படும் கொப்பரைக்கு பணப்பட்டுவாடா பல மாதங்கள் தாமதமாக நடக்கிறது. கடந்த சில வாரங்களாக கொள்முதலும் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் ஆசி பெற்ற வியாபாரிகள் மட்டுமே அரசு மையத்தில் கொப்பரையை விற்க முடியும். கண்காணிப்பு குழுவில் வியாபாரிகளை மட்டுமே சேர்த்துள்ளனர்.பட்டா மாறுதலுக்கு அளிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு இரண்டு ஆண்டுகளாகியும் நடவடிக்கை எடுப்பதில்லை. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு சொட்டு நீர் மானியம் வழங்கப்படுவதில்லை. விவசாய குழு உறுப்பினர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், பிற விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். அனைத்து விவசாயிகளுக்கும் சொட்டு நீர் மானியம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.வன எல்லையில் உள்ள விளைநிலங்களில் பயிர்கள் விலங்குகளால் சேதப்படுத்தப்படுகிறது. உரிய நேரத்தில் நிவாரணம் வழங்காமல் வனத்துறையினர் இழுத்தடிக்கின்றனர். மலைவாழ் மக்கள் சீமாறு புல்லை வேன்களில் ஏற்றி வர கொண்டு வரப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும்.பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தில் போதுமான தண்ணீர் கிடைக்காமல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. நிவாரணம் வழங்க பாரபட்சம் இல்லாமல் கணக்கெடுப்பு பணியை மேற்கொள்ள வேண்டும். பாசனத்துக்காக, இறுதி சுற்று தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், தண்ணீர் திருட்டு அதிகரித்துள்ளது.

---

பொதுப்பணித்துறையினர் மற் றும் பாசன சங்க நிர்வாகிகள் இணைந்து பிரதான கால்வாயில் ஆய்வு நடத்தும் போது, கல்வீச்சு போன்ற மிரட்டல்கள் அதிகரித்துள்ளன.

பெரியபாப்பனூத்து அருகே பிரதான கால்வாய் கரையை குடைந்து தண்ணீர் திருடப்படுகிறது. 1,000 கன அடி தண்ணீர் செல்லும் பிரதான கால்வாயை உடைத்து தண்ணீர் திருடப்படுவதை தடுக்க, போலீஸ், வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை அடங்கிய குழுவை அமைத்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.உடுமலை, மடத்துக்குளம் பகுதியில் கனிம வள விதிமுறைகளை மீறி, பல அடி ஆழத்துக்கு மண் சுரண்டப்பட்டு கடத்தப்படுகிறது. அரசு நிலங்களில் முறைகேடாக கல்குவாரிகள் இயங்கி வருகின்றன. நாள்தோறும் கனரக டிப்பர் லாரிகளில் ஆயிரக்கணக்கான லோடு மண் கடத்தப்படுகிறது. இதனால், இப்பகுதியில் அனைத்து வளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். மண் ஏற்றிச்செல்லும் லாரிகள், விவசாயிகள் பயன்படுத்தும் பாதைகளை பாழ்படுத்தியுள்ளன. அசுர வேகத்தில் செல்லும் லாரிகளால் ரோட்டில் யாரும் நடமாட முடியாத நிலை ஏற்படுகிறது.இந்த லாரிகளை கட்டுப்படுத்துவது யார் என்பது கேள்விக்குறியாகி உள்ளது. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், இதுகுறித்து நடவடிக்கை எடுக்காவிட்டால், பல ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**தக்காளி விலை "கிடுகிடு'**

திருப்பூர்: திருப்பூர் மார்க்கெட்டுக்கு லோக்கல் தக்காளி வரத்து குறைந்திருப்பதால், விலை "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது.தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து குறைந் துள்ளது. சாதாரண நாட்களில் சராசரியாக 500 கூடை தக்காளி வரத்திருக்கும். கோடை தாக்கத்தில், நாளொன்றுக்கு 250 கூடை வரை விற்பனைக்கு வருகிறது.கடந்த 10 நாட்களுக்கு முன், கிலோ 24 ரூபாய் வரை விற்றது; சில நாட்களாக வரத்து குறைந்து, சில்லரை விற்பனையில் கிலோ 32 ரூபாயை தொட்டது. இந்தாண்டு போதிய அளவில் மழை பொழிவு இல்லை; பயிர் செய்யும் பரப்பளவும் குறைந்து வருவதால், விலை அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது.வியாபாரிகள் கூறுகையில், "லோக்கல் தக்காளி வரத்து குறைந்துள்ளது. ஆந்திரா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வெளிமாநிலங் களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. "கடந்த ஒரு வாரமாகவே தக்காளி விலை படிப்படியாக உயர்ந்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால், தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது; விலை தொடர்ந்து ஏறுவதற்கான வாய்ப்புள்ளது,' என்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## காடை வெயில் காரணமாக ஆனைமலை வட்டாரத்தில் இளநீர் விற்பனை தீவிரம்



ஆனைமலை அருகே விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ள இளநீரை படத்தில் காணலாம்.

*ஆனைமலை, மே.31–*
*கோடை வெயில் காரண மாக ஆனைமலை வட்டார பகுதியில்இளநீர் விற்பனை தீவிரம் அடைந்து உள்ளது.*
*கோடை வெயில்*
*கடந்த 2 மாதமாக கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் பொது மக்கள் குளிர்பான கடைகள், ஜூஸ் கடைகள் ஆகியவற்றுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர்.*
*இருந்த போதிலும் இயற்கை யாக கிடைக்க கூடிய அதுவும் சிறிதும் கலப்படம் இல்லாத இளநீரை பொது மக்கள் பலர் விரும்பி சாப்பிட்டுக்கொண்டு தான் உள்ளனர்.*
*தென்னைக்கு புகழ் பெற்ற ஆனைமலை வட்டாரத்தில் 50 ஆயிரம் ஏக்கர் பரப் பளவில் தென்னை பயிரிடப் பட்டு உள்ளது.இதில் நெட்டை குட்டை ரகம், குட்டை நெட்டை ரகம்,நாட்டு ரகம், டி.ஜெ.குட்டை நெட்டை என பல்வேறு ரகங்களை விருப்பத்துக்கு ஏற்ப விவசாயி கள் பயிரிட்டு உள்ளனர்.*
*நாட்டு ரக இளநீர்*
*தற்போது தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளதால் விவசாயிகள் இளநீர் அறுவடை செய்வதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கோடை வெயில் கொளுத்தி வருவதால் இள நீருக்கு அமோக வரவேற்று கிடைத்துள்ளது.*
*ஆழியாறு அணையின் நீர்ப்பாசன பகுதியில் உள்ள தென்னை மரங்களில் விளையும் இளநீர் பசுமை யாகவும், அதிக சுவையாகவும் உள்ளதால் இந்த இளநீருக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு உள்ளது. முன்னர் குட்டை நெட்டை இளநீரை மட்டும் கொள்முதல் செய்த வியா பாரிகள் இளநீர் தட்டுப்பாடு காரணமாக நாட்டுரக இளநீரையும்*

கொள்முதல் செய்ய தொடங்கி உள்ள னர்.
இதனால் நாட்டு ரக இளநீரின் விலை ரூ.8 ஆகவும், குட்டை நெட்டை ரக இள நீரின் விலை ரூ. 13 ஆகவும் அதிகரித்து உள்ளது.
இது குறித்து விவசாயியும், பெரியணை இறவை பாசன விவசாயிகள் சங்க தலைவருமான சத்தியமூர்த்தி கூறியதாவது:–
அல்சருக்கு மருந்து
ஆலைமலையில் விளையும் இளநீருக்கு தமிழ்நாட்டில் மட்டுமின்றி மும்பை, ஐதராபாத் உள்ளிட்டவெளி மாநிலங்களிலும் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் இளநீர் நல்ல விலைக்கு விற்பனை ஆக வாய்ப்பு உள்ளது.
குட்டை நெட்டை ரகத்தை சாகுபடி செய்துள்ளதின் மூலம் ஆண்டுக்கு தென்னை ஒன்றுக்கு 250 முதல் 300 இளநீர் கிடைக்கிறது.
மக்கள் விரும்பும் வகையில் ஆரஞ்சு, மஞ்சள், பச்சை நிறங்களில் உள்ள குட்டை நெட்டை ரக இளநீரில், 500 மில்லி இளநீர் இருப்பதாலும், அல்சருக்கு நல்ல மருந்தாக கருதப்படுவதாலும் அதிக அளவில் இந்த வகை இளநீரை வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.
இவ்வாறுஅவர் கூறினார்.

---

## நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வளத்தை பாதுகாக்க பொதுமக்கள் முன் வர வேண்டும் சவுந்திர பாண்டியன் எம்.எல்.ஏ. பேச்சு

கோத்தகிரி, மே.31–
நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வளத்தை பாது காக்க பொதுமக்கள் முன் வர வேண்டும் என கோத்தகிரியில் நடை பெற்ற காய்கறி கண் காட்சி நிறைவு விழாவில் குன்னூர் எம்.எல்.ஏ. சவுந்திர பாண்டியன் கூறியுள்ளார்.
நிறைவு விழா
கோத்தகிரி நேரு பூங்காவில் 3–வது காய்கறி கண்காட்சி நேற்று முன்தினம் தொடங் கியது. இந்த கண்காட்சியின் நிறைவு விழா நேற்று மாலை சுமார் 3 மணியளவில் நேரு பூங்காவில் நடைபெற் றது. விழாவிற்கு குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சவுந்திர பாண்டியன் தலைமை தாங்கினார்.
மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், வருவாய் அலுவலர் குப்புசாமி ஆகி யோர் முன்னிலை வகித்தனர். விழாவில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சவுந்திர பாண்டியன் பேசியதாவது:–
காய்கறி பயிர்கள் சேதம்
நீலகிரி மாவட்டத்தின் இயற்கை வளங்கள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதால் வன விலங்குகள் விவசாய பயிர்களை நாசம் செய்து வருகிறது. எனவே காய்கறி தோட்டங்களை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் தேவை யான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
நீலகிரியை கடந்த 1985–86–ம் ஆண்டில் ஒப்பிடும் போது காடுகள் வெகுவாக அழிக்கப்பட்டு மண் திட்டுக் கள் அதிகமாக உள்ளது. எனவே இயற்கை வளங்களை பாதுகாத்திட பொதுமக்கள் முன்வர வேண்டும். அப்போது தான் எதிர்கால சந்ததியினர் வளமோடு வாழமுடியும்.
மருத்துவ குணங்கள்

அடுத்து ஆண்டு நடைபெற உள்ள காய்கறி கண்காட்சியில் சுற்றுலா பயணிகள் தெரிந்து கொள்ளும் வகையில் காய் கறிகளின் அருகில் அதன் மருத்து குணங்களை எழுதி வைக்க வேண்டும். கோத்தகிரி யில் உள்ள ரங்கசாமி மலை, கோடநாடு காட்சி முனை, கேத்தரின் நீர்வீழ்ச்சி போன்ற சுற்றுலா தலங்களை மேம் படுத்திட வேண்டும். குன்னூரில் உள்ள பக்கா சூரன் மலையை சுற்றுலா தலமாக மாற்றிட வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் மேற் கொள்ள வேண்டிய வளர்சி பணிகள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை என்னி டமும், மாவட்ட கலெக்டரி டமும் மனுவாக அளிக்க லாம்.

இவ்வாறுஅவர் பேசினார்.

கோப்பை

பின்னர் சிறந்த வீட்டு காய்கறி தோட்டத்திற்கான கோப்பை மற்றும் சுழற்கோப் பைகளை வெற்றி பெற்றவர் களுக்கு எம்.எல்.ஏ. சவுந்திர பாண்டியன் வழங்கினார். விழாவில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் வீரபத்திரன், மாவட்ட வேளாண்மை விற் பனைக்குழு தலைவர் இளங் கோவன், பேரூராட்சி தலைவர் போஜன், துணை தலைவர் செந்தில் கவுன்சிலர்கள் அரக் கம்பை கிருஷ்ணன், வெள்ளை யன், தங்கேஷ், சுஜதா ராமு உள்பட பலர் கலந்து கொண்ட னர்.முன்னதாக தோட்டக் கலைத்துறை இணை இயக்குனர் இஸ்ரவேல் வரவேற்றார். முடிவில் உதவி இயக்குனர் மணி நன்றி கூறினார்.